1970 மார்ச் 7]

(இ) தொழிற்பேட்டை எப்போதிலிருந்து உற்பத்தியைத் துவக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மதுரை அருகே கப்பலூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சீரமைக்கப்பட்ட தொழில் மனைக்கு மொத்தம் 525.59 ஏக்கர் பட்டா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் முதல் கட்டத்தை சீரமைத்து சாலைகள் போடுதல், சாக்கடை அமைத்தல், தண்ணீர் வழங்குதல் ஆகியவற்றுக்கான சீரமைப்பு பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் சுமார் ஆறுமாத காலத்திற்குள் முடிவுறும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கிறது? என்ன விலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது? தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு என்ன விலைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இப்போதைக்கு 525.59 ஏக்கர் நிலம் போதும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. என்ன தொகைக்கு வாங்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு ஏக்கருக்கு 14 ஆயிரம் ரூபாய் என்று தற்போதைக்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

*260 வினா.—**திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் ஒரு தொழிற்பேட்டை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான வேலைகள் ஏதேனும் தொடங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே. திருச்சி மாவட்டத்தில் அரியலூர், உடையார்பாளையம் வட்டங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இந்த வட்டங்கள் அபிவிருத்தியடைய இனிமேலாவது தொழிற்பேட்டைகளை அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படியெனில் எப்போது தொழிற்பேட்டைகள் வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு கோட்டத்தின் (ரெவின்யூ டிவிஷன்) எல்லைக்குள் தொழிற்பேட்டை இருக்கவேண்டுமென்று கருதி, சிட்டத்தட்ட 33 இடங்களில்

தொழிற் பேட்டைகளை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. 15 இடங்களிலே நாம் படிப்படியாக இதை நிறைவேற்றலாம் என்ற முடிவு எடுத்திருக்கிறோம். அரியலூரைப் பொறுத்த வரையில் அந்த 15 இடங்களைப்பற்றி முடிவு எடுக்கும்போது கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அரியமங்கலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் பல இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அந்தக் காலி இடங்களையெல்லாம் தொழிற்துறையில் ஊக்கம் அளிக்கும் வகையில் மற்றவர்களுக்கு ஒதுக்கித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைக்குள் சில தொழிற்பேட்டையிலே அதிகமாகத் தொழில் தொடங்க தொழிலதிபர்கள் முன்வரவில்லையென்ற குறை இருக்கிறது. இந்தக் குறைகளை நீக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் (பேக்வர்டு ஏரியா) தொழில் தொடங்கினால் சில சலுகைகள் கொடுக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. உதாரணமாக, தொழிலதிபர்களுக்கு மின்சார சலுகை அளித்தல், நிலத்தின் விலை, வாடகை, சலுகை அளித்தல் நீண்டகால கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வது என்ற சலுகைகள் அளிக்கலாம் என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கட்டப்பட்டிருக்கிற தொழிற்பேட்டைகளில் தொழில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது கோயில்பட்டியில் தொழிற்பேட்டை மூன்று, நான்கு ஆண்டுகளாக சும்மா இருக்கிறது. அந்த இடத்தில் அரசாங்கமாவது சில தொழில்களை ஆரம்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். நம்முடைய தொழிற்கொள்கையை செயல்படுத்தி வருகிறோம். சில இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க முன்வரவில்லையென்ற காரணத்தால் என்ன திட்டங்கள் செய்யலாம் என்பதை யோசித்து வருகிறோம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கதர் விற்பனை

■ 261 வினா—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1969-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தீபாவளியை முன்னிட்டு கதர் விற்பனையில் முதல் இடம் வகிக்கும் ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குளித்தலை.